முருகப்பெருமான் துணை

**மகான் மார்க்கண்டேயர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.06.2022, புதன்கிழமை

1. ஞானத்தலைவனின் சக்தி மிக்க
ஞானியாக வந்த அரங்கனே
தானதரும பலம் கொண்டநல்
தவராசனே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
ஆசிபட சுபகிருது விடை திங்கள்
அறிவிப்பேன் மூவாறுதிகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 18 ம் நாள், 01.06.2022 புதன்கிழமை)
3. வாரமதில் மார்க்கண்டேயர் யானும்
வழங்குவேன் உலகநலம் காண
சோரமிலா மக்களை படைக்கவே
சுத்த நெறிதனை அருளியே
4. அருளியே அரங்கன் வழிநடத்தும்
ஆற்றல் மிக்க மார்க்கம் தன்னை
வரமென மக்கள் ஏற்றுமே
வணங்கித்தொடர உலகினில் மாற்றம்
5. மாற்றம் சாத்மீக சமதர்மமாக
மறுமை விரட்டும் சக்தியாக
ஆற்றலாக நிலைகள் பெருகி
அனைவரும் ஞானிகள் ஆவர்
6. ஆவதுடன் கலித்துன்பங்கள்
அனைத்தையும் விரட்டியே
புவனம் காக்கும் சக்திகளாவர்
புண்ணியம் தழைக்கும் வண்ணம்
7. வண்ணமுடன் வளர்ச்சிக்கான
வழிவகைகள் மிகுதிசெய்து
எண்ணமெல்லாம் தருமமாக
எங்கும் எதிலும் நேர்மையாக
8. ஆகவே உலகோர் சிறந்து
அரங்கன் தேர்வு செய்யும்
மகான்களாகி நிலை உயர்வர்
மண்ணுலகில் இந்தவித அற்புதத்தை
9. அற்புதத்தை ஞானிகள் சூழ
ஆறுமுகனார் அரங்கன் வழி
ஏற்புகாண வேண்டி இனிதே
இவ்வித அவதார சூட்சுமம்

10. சூட்சுமம் நிகழ்த்தி இருக்க
சுருதிபடி கண்டுணர்ந்துமே
சூட்சும வழி வந்தவர் எல்லாம்
சிந்தை தெளிந்து சடுதி

11. சடுதி அரங்கன் நோக்கமாக
சகலரும் ஞானிகளாகி
இடரில்லா ஞானயுகம் படைப்பர்
இயம்பிய அருளாசி முற்றே

—சுபம்—